ஸ்ரீ சக்ர ராஜ சிம்மாஸனேஸ்வரி
ஸ்ரீ லலிதாம்பிகையே புவனேஸ்வரி - ஸ்ரீ

ஆகமவேத கலாமய ரூபிணி
அகில சராசர ஜனனீ நாராயணி
நாக கங்கண நடராஜ மனோஹரீ
ஞான வித்யேஸ்வரி ராஜராஜேஸ்வரி

பலவிதமாய் உன்னை பாடவும் ஆடவும்
பாடிக்கொண்டாடும் அன்பர் பதமலர்சூடவும்
உலக முழுதும் எனதகமுறக்காணவும்
ஒரு நிலை தருவாய் காஞ்சி காமேச்வரி

உழன்று திறிந்த என்னை உத்தமனாக்கி வைத்தாய்
உயரிய பெரியோருடன் ஒன்றிட கூட்டிவைத்தாய்
நிழலெனத்தொடர்ந்த முன் தீ வினை நீங்கசெய்தாய்
நித்ய கல்யாணீ பவானி பத்மேச்வரி

துன்பபுடத்திலிற்று தூயவனாக்கி வைத்தாய்
தொடர்ந்த முன் மாயை நீங்கி பிறந்த பயனைத்தந்தாய்
அன்பை புகட்டி உந்தன் ஆடலைக்காணச்செய்தாய்
அடக்கலம் நீயே அம்மா அகிலாண்டேச்வரி